# மன்முனை தெற்கு எருவில் பற்றுப் பிரதேச சபை
# மட்டக்களப்பு மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

## 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மிளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 யூலை 15 ஆந் திகதி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 யூன் 01 ஆந் திகதி கணக்காய்விற்காக சமரப்பிக்கப்ட்டிருந்தது.

## 1.2 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய மன்முனை தெற்கு எருவில் பற்றுப் பிரதேச சபையானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் எனது இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் எற்படும் தாக்கங்களைத்தவிர பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொளகைகளுக்கு அமைய மன்முனை தெற்கு எருவில் பற்றுப் பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,725,748 ஆகும்.

### 1.3.2 இணங்காமைகள்

கீழே காட்டப்பட்ட விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவைகளுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்வற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் இல. 396 | ரூபா 8,730 பெறுமதியான 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக மாற்றப்படாதிருந்த காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | நிதிப்பிரமாணம் இல. 572 | நீண்டகாலமாகக் காணப்பட்ட ரூபா 1,205,240 தொகையான காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | கிழக்கு மாகாண நிதி விதி இல. 174 | பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தலின்றி பல்வேறு நோக்கங்களுக்காக ரூபா 7,775 தொகையானது செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | வடக்கு கிழக்கு மாகாண விசேட வர்த்தமானி அறிவித்தலின் விதி 3(1) | மாதாந்த சபை அமர்வுகளில் பங்குபற்றாத உறுப்பினர்களுக்கு ரூபா 5,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (உ) | 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை வரிகள் அதிகாரச் சட்டம் | ஊதியங்களிலிருந்து ரூபா 525 தொகையான முத்திரைக் கட்டணம் கழிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 1769 ஆம் இலக்க 1992 செப்தெம்பர் 30 ஆந் திகதிய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் சுற்றுநிருபம் | சுற்றுநிருபத்திற்கு முரணாக ரூபா 237,445 தொகையான வரைதற் கட்டணங்கள் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தன. |
| (எ) | கொள்வனவு வழிகாட்டிக் கோவை இல. 3.9.1 | கொள்வனவு வழிகாட்டிக் கோவைக்கு முரணாக 2 சனசமூக நிலையங்களின் |

| | | |
|---|---|---|
| | | சிவில் வேலைகள் ரூபா 711,150 பெறுமதியில் கையளிக்கப்பட்டிருந்தன. |
| (ஏ) | வடக்கு கிழக்கு மாகாணசபையின் விசேட வர்த்தமானி அறிவித்தலில் திருத்தப்பட்ட 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 184 ஆம் பிரிவு | சுற்றுநிருபத்திற்கு முரணாக உறுப்பினர்களுக்கு ரூபா 5,670 தொகையானது சிற்றுாண்டிகளுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஐ) | தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4:4:1 ஆம் பிரிவு மற்றும் IX ஆம் அத்தியாயத்தின் 2:2 ஆம் பிரிவு | வரைதற் கட்டணங்களிலிருந்து ரூபா 30,645 தொகை கழிக்கப்பட்டு சுகாதாரத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,314,274 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 4,291,202 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள் தொடர்பான நிலைமை கீழே தரப்படுகின்றன.

| | வருமான விடயம் | 2010 மதிப்பிடப் பட்டது | 2010 உள்ளபடி யானது | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் | 2009 மதிப்பிடப் பட்டது | 2009 உள்ளபடி யானது | 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | இறைகளும் வரிகளும் | 66 | 66 | - | 15 | 15 | - |
| (ii) | குத்தகை வாடகைகள் | 6,511 | 6,511 | 1,337 | 1,535 | 1,541 | 494 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 660 | 660 | 26 | 706 | 706 | 27 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 5,201 | 5,201 | - | 2,116 | 2,116 | 1,656 |

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்டவை, உள்ளபடியான செலவினம் மற்றும் முரண்கள் என்பன கீழே தரப்படுகின்றன.

| செலவின விடயம் | 2010 மதிப்பிடப் பட்டது | 2010 உள்ளபடி யானது | 2010 முரண் | 2009 மதிப்பிடப் பட்டது | 2009 உள்ளபடி யானது | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| மீண்டெழும் செலவினம் | | | | | | |
| ஆளணி வேதனங்கள் | 18,534 | 3,715 | 14,819 | 17,610 | 15,620 | 1,990 |
| ஏனையவை | 148 | 69 | 79 | 11,224 | 8,448 | 2,776 |
| உப மொத்தம் | 18,682 | 3,784 | 14,898 | 28,834 | 24,068 | 4,766 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மூலதனச் செலவினம் | - | 5,893 | (5,893) | 1,306 | 2,300 | (994) |
| | ---------- | ----------- | ------------ | ---------- | ----------- | ------------ |
| முழு மொத்தம் | 18,682 | 9,677 | 9,005 | 30,140 | 26,368 | 3,772 |
| | ---------- | ----------- | ------------ | ---------- | ----------- | ------------ |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி

சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணியின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|
| **பதவியினர் தரங்கள்** | **அங்கீகரிக்கப்பட்டது** | **உள்ளபடியானது** |
| பதவிநிலைத் தரங்கள் | 01 | 01 |
| இரண்டாம் தரங்கள் | 18 | 26 |
| ஆரம்பத் தரங்கள் | 32 | 32 |
| ஏனைய (அமைய/ தற்காலிக) | - | 43 |
| | --------- | -------- |
| | 51 | 102 |
| | ==== | ==== |

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 அறவிடவேண்டிய பதவியினர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 4 ஆண்டுகளுக்கும் மேலாக அறவிடவேண்டிய பதவியினர் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 334,167 ஆக இருந்தது.

### 2.5.2 அசையாத நடைமுறைச் சொத்துக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏழு ஆண்டுகளுக்கு மேலாக அசையாத இருப்புக்களின் பெறுமதி (பயன்படுத்தாத) ரூபா 48,216 ஆகும்.

### 2.5.3 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக மெய்மையாய்வுகள் / கணிப்பீட்டுச் சபை அறிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்படாத புத்தக மீதிகளில் கணிப்பிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 19,592,582 ஆக இருந்தது.

### 2.6 வங்கிக் கணக்கு

(அ) ரூபா 134,239 கூட்டுத்தொகையான இரண்டு வங்கிக் கணக்கு மீதிகள் நீண்ட காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்டன.

(ஆ) ரூபா 38,196 பெறுமதியான 3 மறுக்கப்பட்ட காசோலைகள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 163,379 தொகையான காசு மோசடி தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.7 உள்ளகக் கணக்காய்வு

சபையால் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) உள்ளகக் கணக்காய்வு

(ஆ) வருமான நிர்வாகம்